# பெப்ரவரி – 21 – புதன்

**புனித பீற்றர் டேமியன்**

**“இத் தீய தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர்” லூக்கா 11:29**

## முதல் வாசகம் : யோனா 3 : 1 – 10

அக்காலத்தில் இரண்டாம் முறையாக யோனாவுக்கு ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டது. அவர்,”நீ புறப்பட்டு நினிவே மாநகருக்குப் போய், நான் உன்னிடம் சொல்லும் செய்தியைஅங்குள்ளோருக்கு அறிவி” என்றார். அவ்வாறே யோனா புறப்பட்டு ஆண்டவரது கட்டளைப்படி நினிவேக்குச் சென்றார். நினிவே ஒரு மாபெரும் நகர். அதைக்கடக்க மூன்றுநாள் ஆகும். யோனா நகருக்குள் சென்று, ஒரு நாள் முழுதும் நடந்தபின், உரத்த குரலில், ”இன்னும் நாற்பது நாளில் நினிவே அழிக்கப்படும்” என்று அறிவித்தார்.நினிவே நகர மக்கள் கடவுளின் செய்தியை நம்பி, எல்லாரும் நோன்பிருக்க முடிவு செய்தார்கள். பெரியோர் சிறியோர் அனைவரும் சாக்கு உடை உடுத்திக் கொண்டனர்.இந்தச் செய்தி நினிவே அரசனுக்கு எட்டியது. அவன் தன் அரியணையை விட்டிறங்கி, அரச உடையைக் களைந்துவிட்டு, சாக்கு உடை உடுத்திக்கொண்டு, சாம்பல் மீது உட்காரந்தான்.மேலும் அவன் ஓர் ஆணை பிறப்பித்து அதை நினிவே முழுதும் பறைசாற்றச் செய்தான். இதனால் அரசரும் அரச அவையினரும் மக்கள் அனைவருக்கும் அறிவிப்பதாவது எந்த மனிதரும் உணவைச் சுவைத்துக்கூடப் பார்க்கக் கூடாது. ஆடு, மாடு முதலிய விலங்குகளும் தீனி தின்னவோ தண்ணீர் குடிக்கவோ கூடாது.மனிதரும் விலங்குகளும் சாக்கு உடை உடுத்திக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொருவரும் கடவுளை நோக்கி மன்றாட வேண்டும் தம் தீய வழிகளையும், தாம் செய்துவரும் கொடுஞ்செயல்களையும் விட்டொழிக்க வேண்டும்.இவ்வாறு செய்தால், கடவுள் ஒருவேளை தம் மனத்தை மாற்றிக் கொள்வார் அவரது கடுஞ்சினமும் தணியும் நமக்கு அழிவு வராது.”கடவுள் அவர்கள் செய்தது அனைத்தையும் பார்த்தார். அவர்கள் தீய வழிகளினின்று விலகியதை அவர் கண்டு, தம் மனத்தை மாற்றிக் கொண்டார் தாம் அவர்கள்மீது அனுப்புவதாகச் சொல்லியிருந்த தண்டனையை அனுப்பவில்லை.

**பதில்பாடல் :** நொறுங்கிய உள்ளத்தை இறைவா நீர் அவமதிப்பதில்லை

## நற்செய்தி : லூக்கா 11 : 29 - 32

அக்காலத்தில் மக்கள் வந்து கூடக்கூட இயேசு கூறியது: ”இந்தத் தீய தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர். இவர்களுக்கு யோனாவின் அடையாளத்தைத்தவிர வேறு அடையாளம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. யோனா நினிவே மக்களுக்கு அடையாளமாய் இருந்ததைப் போன்று மானிட மகனும் இந்தத் தலைமுறையினருக்கு அடையாளமாய் இருப்பார். தீர்ப்புநாளில் தென்னாட்டு அரசி இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார். ஏனெனில் அவர் சாலமோனின் ஞானத்தைக் கேட்க உலகின் கடைக்கோடியிலிருந்து வந்தவர். ஆனால் இங்கிருப்பவர் சாலமோனிலும் பெரியவர் அல்லவா! தீர்ப்பு நாளில் நினிவே மக்கள் இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார்கள். ஏனெனில் யோனா அறிவித்த செய்தியைக் கேட்டு அவர்கள் மனம் மாறியவர்கள். ஆனால் இங்கிருப்பவர் யோனாவைவிடப் பெரியவர் அல்லவா!“ என்றார்.

**தியானம்:** ஒவ்வொரு வழிபாட்டு ஆண்டு நாட்காட்டிகளில் தவக்காலம், கிறிஸ்து பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு என்று வந்து போய்க்கொண்டே இருக்கின்றன. அந்தந்தக் காலங்களுக்கேற்ப பற்பல செயற்பாடுகளை மேற்கொள்வது நமக்கு ஒரு தொடர் நிகழ்ச்சிபோலவே எண்ணத் தோன்றலாம். நாம் குழந்தைகளாய் இருந்தபோது கிறிஸ்து பிறப்புக் காலமென்றாலே நம் எதிர்பார்ப்புக்கள், சிந்தனைகள் எல்லாமே நாம் பெறப்போகும் பரிசுப் பொருட்கள், நன்கொடைகள் பற்றியதாகவே இருக்கும். ஆனால், நாம் ஆன்மீக முதிர்ச்சி பெறும்போது அதுவே, தேவையில் இருக்கும் பிறருக்கு நாம் உதவவேண்டிய காலமே அது என்பதைப் புரிந்துகொள்ளுகின்றோம் அன்றோ! நமது வாழ்நாட்களில் எத்தனையோ தவக்காலங்களை நாம் கடந்து வந்திருக்கலாம். பல தவக்காலச் செய்திகளை நாம் கேட்டிருக்கலாம். ஆனால், அவை நம்முள்ளத்தில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன எனச் சிந்திக்க மீண்டுமொரு தவக்காலம் நமக்கு கடவுளின் இரக்கத்தினால் தரப்பட்டிருக்கின்றது. இறைவாக்கினர் யோனா வழியாக “இன்னும் நாற்பது நாளில் நினிவே அழிக்கப்படும்.” என்ற செய்தி கேட்ட நினிவே நகர் மக்களும், அரசனும் கடவுளின் பேரிரக்கத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக மனமாற்றத்துக்குரிய செயற்பாடுகளை முன்னெடுத்தமையினால், அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டனர். ஆனால், இன்றைய இறைவார்த்தையின்படி இறைமகன் இயேசுவும், அவரது நற்செய்தியும் மட்டுமே நமக்கு அடையாளங்களாக இருக்க முடியும். இதைத் தவிர வேறு எந்த அடையாளத்திற்காகவும் நாம் காத்திருக்கலாகாது. எனவே, காலம் தாழ்த்தாது மனந்திரும்பி நற்செய்தியை நம்புவோம். அத்தோடு நின்றுவிடாமல் மனந்திரும்புதலுக்கு அடையாளமான செயற்பாடுகளில் ஈடுபடுவோமாக!